செய்தி வெளியீடு எண்: 319 நாள்: 01.07.2026

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு ப.ராஜ்குமார் அவர்கள், வீட்டுவசதி வாரியத்தின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் குறித்து ஆய்வினை மேற்கொண்டார்கள்.**

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வின் போது, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள், விற்பனை செய்யப்பட வேண்டிய வீடுகள் / மனைகள், ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விற்பனைப் பத்திரங்கள், நடப்பு ஆண்டில் விற்பனைக்கு கொண்டு வரப்படவுள்ள புதிய திட்டங்கள், வாரிய வாடகை / அரசு வாடகை குடியிருப்புகள், வாரியத்தின் வருவாய் நிலவரம், நிர்வாகம், புதிய நில எடுப்பு விவரம், முதல்வரின் முன்னெடுப்பு திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் மற்றும் வாரியத்தின் வரவு செலவு குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்கள்.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு குடியிருப்பு அலகுகளை, வீட்டுவசதி வாரியம் செயல்படுத்தி, திறம்பட ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்கியுள்ளது.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய மனை மேம்பாட்டு திட்டங்கள், கூட்டு மேம்பாட்டு திட்டங்கள், வணிக வளாக கட்டுமானப் பணிகள் ஆகியவற்றினை விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

தொடர்ந்து, அரசு அலுவலர்களுக்கான சொந்த வீடு கட்டும் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளை,

Verified RealEstate TM

வீட்டுவசதி வாரியத்தால் மறு கட்டுமானம் செய்தல், துணை நகரத் திட்டங்களான திருமழிசை, உச்சப்பட்டி– தோப்பூர் (மதுரை), முள்ளூர் (புதுக்கோட்டை) ஆகிய திட்டங்களை மேம்படுத்துவதை தனிக் கவனம் செலுத்திட ஆலோசனை வழங்கினார்கள்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி,** வீட்டுவசதி வாரியத்தால் வழங்கக் கூடிய சேவைகள் மற்றும் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு திட்டங்களில், விற்பனையாகாமல் உள்ள குடியிருப்புகள் மற்றும் மனைகள் ஆகியவற்றினை இணைய வழியில் விற்பனைக்கு கொண்டு வருவதன் மூலம் பொது மக்களுக்கு விரைவாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் சிரமமின்றி கிடைத்திட வேண்டுமென, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இனிவரும் காலங்களில், வீட்டுவசதி வாரியத்தின் அனைத்து சேவைகளும், திட்டங்களும் இணையவழி மூலமாகவே நடைபெற வேண்டுமென மேலும் அறிவுறுத்தினார்கள்.

வீட்டுவசதி வாரிய தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை திரு இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ,ப., வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சு.பிரபாகர். இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu

Verified RealEstate™